சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 302/2017

மனுதாரர் / எதிர்மனுதாரர் எ.ம.சா.1வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி 12.10.2023 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பிரவினா | கிராமம : | |
| த/பெ : | முத்து | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் முசிறி வட்டார போக்குவரத்து அலுலவத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். மோட்டார் வாகன ஆய்வாளருக்கு இந்த நீதிமன்றத்தில் இருந்து வந்த சம்மனின் பேரில் அவர் எனக்கு வழங்கிய அத்தாட்சி கடிதத்தின் பேரில் இன்று நான் சாட்சி சொல்ல ஆஜராகியுள்ளேன். அந்த அத்தாட்சி கடிதம் சா.சா.ஆ-1 . எங்கள் அலுவலகத்தில் அறிவழகன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை அது சம்பந்தமான தேடுதல் அறிக்கை தாக்கல் செய்கிறேன் அது சா.சா,ஆ.2 எங்கள் அலுவலக ஆள்வரைக்குள் வசித்தால் எங்கள் அலுவலகத்தில் தான் ஓட்டுநர் உரிமம் பெறவேண்டும் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை

ஒரு நபர் எங்கள் அலுவலகத்தில் அல்லாமல் வேறு அலுவலகத்தில் தற்காலிக முகவரி கொடுத்து ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ஆவணத்தை மட்டும் வைத்து அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று உறுதியாக சொல்ல முடியாது என்றால் சரிதான். அறிவழகன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றும் நான் ஆவணங்களை சரியாக தேடிப்பார்க்காமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அறிவழகனின் முழுமையான முகவரியை வைத்து தேடுதல் மேற்கொள்ள வில்லை என்றால் சரிதான். பிறந்த தேதியை வைத்துதான் ஒருவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என அறிய முடியும் என்றால் சரிதான்.

4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

ஒம் /பிரவினா

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.